செ.வெ.எண்: 943 நாள்: 3.11.2008

# செய்தி வெளியீடு

நடுவண் அரசின் தனிமுறையான பாதுகாப்புப் பணி ( ஒழுங்கு முறை விதிகள்) சட்டம், 2005–ன் பிரிவு 24 னை ( நடுவண் அரசு சட்டம் 29/2005) பின்பற்றி அச்சட்டத்தின் பிரிவு 25–யினை கருத்திற்கொண்டு தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு தனி முறையான பாதுகாப்பு பணி முகமை விதிகள் 2008" என்னும் விதிகளை வடிவமைத்துள்ளது.

இது குறித்து அரசாணை எண். 922, உள் ( காவல்–13) துறை, நாள் 11.08.2008 அன்று அரசிதழிலும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது, மேலும், இச்சட்ட விதிகளை தமிழ்நாடு அரசு இணைய தளம் "www.agaram.tn.gov.in/homefms/" மூலமாக பொதுமக்கள் விரிவாக அறிந்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்விதிகளை செம்மையாக செயல்படுத்திட வேண்டி காவல்துறை தலைவர் (நல்வாழ்வு) அவர்கள் கட்டுபடுத்துதல் மற்றும் கண்காணிப்பு அலுவலராக அரசாணை நிலை எண். 1414, நாள் 17.10.2008–இல் அரசு நியமித்து உள்ளது.

எஸ். மாலதி
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

R. Vijayakumar
பிரிவு அலுவலர்